1972 ஏப்ரல் 4]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தனித் தனியாக இந்த வருமானத்திலிருந்து நிதி ஒதுக்கப்படுவதில்லை. மொத்தமாக மாநிலத்தின் செலவுகளுக்கு அது பயன்படுத்தப் படுகிறது.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, சில கைதேர்ந்த நிபுணர்கள் குறிப்பாக கேரளாவிலிருந்து வருகிறவர்கள் சாராயத்தில் சில வாசனைப்பொருள்களைச் சேர்த்து, அதையே விஸ்கி, பிராந்தி, ஜின் என்ற பெயர்களால் விற்பனை செய்கிறார்கள். அப்படி விற்பனை செய்வதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட குறிப்பிட்ட தகவல் ஏதாவது கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, கள்ளுக்கடைகள், சாராயக் கடைகள் அமைக்கப்படுகிறபோது அவை பள்ளிக்கூடம், பள்ளிவாசல், கோயில் இவைகளுக்கு அருகாமையில் இருக்கக் கூடாதென்று விதிமுறைகள் வகுத்திருக்கிறோம். இந்த விதிமுறை களை மீறி, ஆர்க்காட்டில் 100 அடி தூரத்தில் மதுக் கடைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றி கேட்டபோது "பரவாயில்லை" என்கிற பதில் வந்திருக்கிறது. ஆகவே இந்த விதிமுறைகளை இன்னும் தீவிரமாக அமல் நடத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே பேரவையில் சில புகார்கள் கூறப்பட்டு, ஆட்சேப கரமான பகுதிகளில் இருப்பவைமீது நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கூறி, ஆட்சேபனைகளை எழுதியனுப்பியதன் காரணமாக, அவை அந்தந்த அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுப் பெரும்பாலான இடங்களில் அம்மாதிரியான கடைகள் அகற்றப்பட்டிருக்கின்றன. ஒருசில இடங்களில் அப்படி அகற்றுவதற்குச் சம்மதிக்காமல், கடைகள் அகற்ற முடியாது என்பதற்காக நீதிமன்றங்களுக்குக்கூடச் சென்றிருக்கிறார்கள்.

ஜலகண்டாபுரத்திலுள்ள சாராயக்கடை.

*866. **வினா—திரு. எம். சுரேந்திரன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜலகண்டாபுரம் சாராயக்கடையையும், மேட்டூர் தங்கமாபுரி பட்டணம் கள்ளுக்கடையையும் வேறு இடத்திற்கு மாற்ற வேண்டு மென்ற முறையீடுகள் வந்திருக்கின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தங்கம்மாபுரி பட்டணத்தில் உள்ள கள்ளுக்கடை, மாவட்ட ஆட்சித் தலைவர் கட்டளையிட்டதன் மேல் மறுப்பேதும் இல்லாத வேறு ஒரு இடத்திற்கு அது தற்போது மாற்றப்பட்டுள்ளது.

முறையீடு வந்ததின் பேரில் ஜலகண்டாபுரத்தில் உள்ள சாராயக் கடையை வேறு இடத்திற்கு மாற்ற மேட்டூர் ஆயத் துறை தாசில்தார் கட்டளையிட்டார். ஆனால் கடை உரிமதாரர் மேல்—முறையீடு ஒன்றை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் தாக்கல் செய்தார். இந்த மேல் முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், 15 நாட்களுக்குள் வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும் என்றும், இல்லையென்றால் உரிமம் திரும்பப் பெறப்படும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவிட்டார். ஆனால் இவ்வுத்தரவு 17-3-1972 அன்று உரிமதாரரிடம் சேர்ப்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வுத்தரவை எதிர்த்து உரிமதாரர் உயர்நீதிமன்றத்தில் (சென்னை) ரிட் மனு தாக்கல் செய்ததின் பேரில் உத்தரவு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தொட்டியம் பேரூராட்சிக்கு குடிநீர்த் திட்டம்.

***867. வினா—திரு. சி. க. வடிவேலு :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிரி வட்டம், தொட்டியம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் விஸ்தரிப்புத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) இந்த பஞ்சாயத்தின் நிதி நிலைமை தற்போது சரியாக இல்லாத காரணத்தால் இத்திட்டத்திற்கான ஆய்வு மதிப்பீட்டின் மொத்தத் தொகையை அரசே ஏற்றுக் கொள்வதற்கும், பின்னர் இத்தொகையை படிப்படியாக இப்பஞ்சாயத்து அரசுக்கு செலுத்துவதற்கும், அரசை குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

சீரணிப்படையின் பணிகள்.

***868 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.—

சீரணிப் படையின் பணிகளை மேலும் விரிவு படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?